# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 வைகாசி—31, ஜ. ஆகிர்—14 (13-6-76) ஞாயிறு புத்தகம் 30, இதழ் 15


## விளையாட்டுப் போட்டியை வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் பகிஷ்கரிப்பர்!

18—6—76 வெள்ளிக்கிழமையன்று வேம்படி மகளிர் கல்லூரியின் விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியின் பிரதம அதிதியாக யாழ் அரசாங்க அதிபர் கல்லூரி அதிபரால் அழைக்கப்பட்டுள்ளார். யாழ் அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டதை ஆட்சேபித்து மேற்படி கல்லூரியின் தன்மான முள்ள தமிழ் மாணவிகள் மேற்படி விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்.

இறையில் தமிழ் இளைஞர்கள் ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தும், உலகத் தமிழ் மாநாட்டு தியாகிகளின் நினைவுச் சின்னம் அடித்து உடைக்கப்பட்டதைக் கண்டித்தும், மேற்படி கல்லூரி மாணவிகள் இந்தப் பகிஷ்கரிப்பை நடத்துகின்றனர்.

சென்ற ஆண்டும் அரசியல் அதிகாரி திரு. அருளம்பலம் விளையாட்டுப் போட்டிக்கு அழைக்கப்பட்டதை எதிர்த்து இந்தமாணவிகள்பகிஷ்கரிப்பு நடத்தியது தெரிந்ததே.

18-6-76 பகிஷ்கரிப்பின்போது,வேம்படி மாணவிகளுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலுள்ள வேறு சில கல்லூரி மாணவ மாணவிரும் பகிஷ்கரிப்பிலீடுபட உத்தேசித்துள்ளார்களாம்.







# கூட்டுச்சேரா மாநாட்டுக்கு உலக விடுதலை இயக்கங்களுக்கும் அழைப்பு!

## ஆனால் கூட்டுக்குள்ளே கிடக்கிறார்கள் இன விடுதலை கோரிய தமிழ் இளைஞர்கள்!

### ஆள்வோரின் கபடநாடகம் அம்பலமாகுமா? அன்றேல் அதற்குள் இளைஞர்கள் விடுதலையாவார்களா?


ஆகஸ்டில் இலங்கையில் நடக்கவிருக்கும் கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும்படி பாலஸ்தீன விடுதலை இயக்கம், சிலி விடுதலை இயக்கம்போன்ற வெளிநாட்டு விடுதலை இயக்கங்களுக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளது ஆனால் அதே நேரத்தில் தமது பிறப்புரிமையாகிய இன விடுதலையைக் கோரிய தமிழ் இளைஞர்கள் நீதி விசாரணை ஏதுமின்றி கூட்டுக்குள்ளே பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். உரிமைகோரியதமிழ் இளைஞர்களை இவ்வாறு விசாரணையின்றி ஆண்டுக்கணக்காக சிறைக்குள் தள்ளி கொடுமைப்படுத்திவரும் இலங்கை அரசின் முகமூடி கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாட்டின்போது இங்குவரும் வெளிநாட்டு விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு முன்னால் கிழித்தெறியப்படுமா? அல்லது அதற்குள் இந்த இளைஞர்கள் விடுதலை செய்யப்படுவார்களா? என்ற கேள்வியை அரசியல் வட்டாரங்கள் எழுப்புகின்றன.

1972ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி புதிய குடியரசு அரசியல் சட்டம் நிறைவேறிய நாள் முதல் கடந்த நான்காண்டுகளாக தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளை நிரப்பி வருகிறார்கள். உரிமையும் இன விடுதலையும் கோரிய தமிழ் இளைஞர்களை இலங்கை அரசு கைது செய்து நீதிவிசாரணை ஏதுமின்றி அவசரகாலச் சட்ட விதிகளின்கீழ் தடுப்புக்காவலில் வைத்துக் கொடுமைப் படுத்திவருகிறது,

197?ம் ஆண்டு யூன் திங்களில் கைதுசெய்யப்பட்ட கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகியோருள்ளிட்ட 42 தமிழ்இளைஞர்கள் ஏறத்தாழ மூன்று ஆண்டு சிறைவாசத்தின் பின்னரீ எதுவித வழக்கும் அவர்கள் மீது போடப்படாத நிலையில் சர்வதேச இயக்கமான 'அம்னெஸ்டி இன்டர் நாஷனலின்' தலையிட்டாலும், தமிழர் விடுதலைக் கூட்டணி

—8-ம் பக்கம் பார்க்க

# அஞ்சாநெஞ்சன் சிவகுமாரனுக்கு அஞ்சலி!



5.6.76ல் உரும்பராயில் நடைபெற்ற தியாகி சிவகுமாரன் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் சிவகுமாரன் சிலைக்கு மாலை சூடுவதையும் கூட்டத்தில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களில் ஒரு பகுதியினரையும், நினைவு தினக் கூட்டத்தில் மூதூர் பா. உ. திரு. க. தங்கத்துரை உரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

—படப்பிடிப்பு: ஏ வி. மகாலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




த. தியாகலிங்கம்,
புளியங்குளம்;

கே: தமிழ் இளைஞர் பேரவைக் கிளைகளை திறக்கின்றவர்கள் 4வது மாடிக்குப்போவது நிச்சயம் எனச் சவால் விடும் சிலரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப! நான்காவது மாடிக்கென்ன — நரகத்துக்கு போகவேண்டி வந்தாலும்—இலட்சியத்துக்காக எதையும் தாங்கும் இதயம்கொண்டவர்கள் நமது இளைஞர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத முட்டாள்கள்!

ம. லோகேஸ்வரன்,
ஐயனர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

கே; ஈழ விடுதலை இயக்கம் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: காலம்வரும் — அப்போது எனது கருத்தைக் கூறுவேன்! அதுவரை பொறுத்திருங்கள்!

கே: சிவகுமாரன் அஹிம்சையை நம்பாமல் இருந்தும் சிவகுமாரனின்தாயார் அஹிம்சையை ஆயுதமாகப் பாவிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு அளிப்பது ஏன்?

ப: சிவகுமாரன் அஹிம்சையை நம்பாதவனாக இருந்தால் அவன் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்திருக்கவும் மாட்டான்; உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலப் பவனியின்போது பொலீஸ் அதிகாரிகளின் முன்பு சத்தியாக்கிரகம் செய்திருக்க மாட்டான்!

# இழி நிலை ஏனோ?

பெற்றவர் பெருமையோடு
பேசடா கண்ணே என்று
கற்பித்த மொழியை அந்தக்
கனிவான தமிழை, இன்று
மற்றவர் இகழும் போழ்து
மண்டியிட்டவர்கள் பின்னே
குற்றமே புரிந்தவன் போற்
குனிந்து நீ நிற்பதேனோ?

முத்தமிழ் வேந்தர் ஆண்ட
முது மொழி எமதிதற்கு,
இத்தரைமீது வேறு
இணையில்லை என்பதற்கு
எத்தனை கூறலாம்? இவ்
எழில் மொழிதனை அழிக்க
வித்திடும் வீணர் முன்னே
வெருண்டு நீ நிற்பதேனோ?

சுயநலம்
பெரிதென் றெண்ணி
சுயமொழி மதம் இவற்றை
அயலவன் இகழப் பின்னும்
அவனடி பணிந்து நிற்கும்
துயர்தரு நிலைதானிங்கு
தோழனே ஏன் உனக்கு?
ஈயவன் நீ, தமிழினத்தைக்
காட்டியே கொடுப்பன் நீ.

"பிறப்பவர் யாரும் இங்கு
இறப்பவர்"
என்னும் வார்த்தை
மறப்பதும் ஏனோ தோழா?
மானமாய் வாழுகின்ற
மறத்தமிழ் மகன் நீ என்றால்
மானத்தைக் காப்பதற்காய்
இறப்பவன் மேல்! உனக்கிவ்
இழிநிலை ஏனோ? கூறாய்.

—இரா. இரத்தினசிங்கம்,
—வ ணர்!

மு. வரதா
கைதடி

கே! தன்னைப் புரிந்து கொள்ளாமல் மற்றவர்களின் தவறைத் திருத்துபவர்களை யாருடன் ஒப்பிடலாம்?

ப! இலங்கையில் இனத்துவேஷ ஆட்சி நடத்திக்கொண்டு தென்னாபிரிக்க இனவெறியையும் தென்ரொடீசியாவின் இனவெறியன் அயன் சிமித்தையும் கண்டிக்கும் இலங்கைப் பிரதமர் சிறிமா அம்மையாருடன் ஒப்பிடலாம்!

ஃ

வ. சிவகுமாரன்,
சுழிபுரம்

கே: தமிழ் விடுதலைக்காக பல இளைஞர்கள் சிறையிலே வாடி வதங்கும்போது தந்தை செல்வா பிறந்த நாள் கொண்டாடுவது முறையா?

ப: தந்தை செல்வா தனது பிறந்த நாளைத் தானே கொண்டாடவில்லை; ஆங்காங்குள்ள தமிழ் மக்கள்தான் விழா எடுக்கிறார்கள்; அவ்விழாக்களுக்கு தந்தை செல்வா சென்றாலும் சரி, செல்லாவிட்டாலும் சரி, மக்கள் தாமாகவே விழா எடுக்கிறார்கள். அவ்விழாக்களில் தந்தை செல்வாவின் பெருமை மட்டும் பாடப்படுவதில்லை; சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களின் நிலையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை விளக்கமுமே பேசப்படுகின்றன: பிறந்தநாள் விழாக்கள் பிரச்சாரக் கூட்டங்களாகப் பயன்படுத்தப் படுகின்றன; இதில் என்ன தவறு?

ஃ

ராஜவேந்தன்,
கொழும்பு-6.

கே: கறுப்புக்கொடி பிடித்தால் எதுவும் கிடைக்காது என்று சொல்கிறாரே அமைச்சர் குமாரசூரியர்!

ப: காக்காய் பிடித்தால் அமைச்சர் பதவி கிடைக்கும் என்பதை அவர் சொல்ல மறந்திருக்கக்கூடும்!

ஃ

ஏ, ஆர். எம். இப்ராஹிம்,
மருதமுனை.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியம் நிறைவேறிய பின்னர், தமிழ் மொழியைப் பேசும் முஸ்லிம்கள் நிலை எப்படியிருக்கும்?

ப: அவர்கள் தங்கள் பகுதியில் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய நிலையிருக்கும்! மதசார்பற்ற அரசு இருக்கும் இஸ்லாம்மதத்துக்கும், இந்து கிறித்தவ மதங்களுக்கும் சமத்துவம் இருக்கும்; முழு இலங்கையிலும் இன்று 14 பேருக்கு ஒரு முஸ்லிம் என்று இருக்கும் நிலை தமிழ் ஈழத்தில் மூன்று அல்லது நான்கு பேருக்கு ஒரு முஸ்லிம் என்று மாற்றமடைந்து முஸ்லிம்களின் அரசியல் பலம் கூடும், அதனால் இன்றிருப்பதைவிட முஸ்லிம்களுக்கு சமத்துவம், சமசந்தர்ப்பம் அதிகரிக்கும்!

த. சிவசுப்பிரமணியம்.
கம்பளை.

கே! தமிழர் விடுதலைக் கூட்டணியில் நான்கு தலைவர்களை கைது செய்த பொலிஸ் அதிகாரிகள் தந்தை செல்வாவை கைது செய்யாததன் காரணம் யாது?

ப! தந்தை செல்வாவை கைது செய்யும்படி அரசு உத்தரவிடாதது தான் காரணம். தந்தையைக் கைது செய்தால், அது சர்வதேசப் பிரச்சினையாகிவிடும் என்ற அச்சமே அரசு அப்படி உத்தரவிடாததற்குக் காரணம்.

கே: தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப்போவதாக குமாரசூரியர் சொல்லுகிறாரே...?

ப: எப்படி? தமிழ் இளைஞர்கள் சிங்களப் பெண்ணையும், தமிழ் பெண்களை சிங்கள இளைஞர்களும் திருமண செய்யும் 'கலப்புச் சாதி, தத்துவத்தின் அடிப் படையிலா?

கே: திரு. தொண்டமான் கூட்டணியின் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளாத காரணம் என்ன?

ப! தலைமைப் பதவியை அவர் முற்றாக நிராகரித்து விடவும் இல்லை; அப்பதவியிலிருந்து இதுவரை அவர் ராஜினமா செய்யவுமில்லை; கூட்டணியில் தம்முடைய பங்கு என்னவென்பது வரையறுக்கப்படவேண்டுமென்றே கூறியிருக்கிறார்!

ஃ

சகுந்தலா ஞானானந்தன்,
அல்லைப்பிட்டி.

கே: தந்தை செல்வாவின் தமிழர் விடுதலைக் கூட்டணியில் பிரச்சாரப் பீரங்கிகள் உண்டு; பேனாப்படை வீரர்கள் உண்டு; துள்ளி வரும் வேலையும், ஆவேசத்தை அள்ளிவரும் பகையையும் தலைகுனிய வைக்கும் வெம்புயல் வீரர்கள் உண்டு; இருந்தும் ஏன் நமது தமிழினத்தை எழுச்சிகொள்ள வைக்க முடியவில்லை?

ப: நானூறு ஆண்டு கால அடிமைச் சேற்றை ஆக நான்கு ஆண்டுகளுக்குள் கழுவிட முடியுமா?

ஃ

க. இராசலிங்கம்,
கொழும்பு-13.

கே: புதிய அமைப்புடன் வெளிவருவதாக சொல்லிக் கொள்ளும் வார ஏடொன்று தமிழ் இளைஞர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும் 'வைநசாக' சிண்டு முடிந்து வருவதைக் கவனித்தீர்களா?

ப; கவனித்தேன். ஆனால் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில் அதன் ஆசிரிய பீடத்தில் இப்போது இருப்பவர் முன்னாள் தினபதியார்; இன்றைய யூ. என். பி. யின் தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரும் கூட! அவர் ஆசிரியராக இருக்கும் பத்திரிகை தமிழினத்தின் இலட்சியத்துக்கு எப்படி ஆதரவாக இருக்கும்? இளைஞர் சமுதாயதின் எழுச்சிக் குரல் என்று கூறிக்கொண்டு, இளைஞர்களின் இலட்சியமான 'தனிநாடு' இலட்சியத்தை முறிக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணியை பிளவு படுத்தவுமே இந்த ஏடு முயற்சிக்கிறது. இளைஞர்கள் இந்தப் 'பச்சைத்' தூண்டிலில் சிக்காது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்!

கே! தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டுப் பிரகடனத்தை ஏற்க முடியாது என்கிறாரே இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமான்!

ப! எந்தச் சூழ்நிலை இப்படியொரு அறிக்கையை வெளியிடவேண்டிய நிர்ப்பந்தத்தை அவருக்கு ஏற்படுத்தியதோ எனக்குத் தெரியாது. ஆனால், தேசிய அரசுப்பேரவையில் தமிழ் ஈழத் தீர்மானத்தை கொண்டு வருவது என்ற முடிவு தந்தை செல்வாவின் இல்லத்தில் திரு. தொண்டமான், திரு. செல்லச்சாமி ஆகியோரும் கலந்து கொண்ட தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகவே எடுக்கப்பட்டது. அத்துடன் இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்த பின்பும் முஸ்லிம்கள் இந்தியாவில் வாழ்வதுபோலவே—தமிழ் ஈழம் தனியரசானாலும் மலைநாட்டுத் தமிழர்கள் இப்போது தாங்கள் வாழும் இடங்களிலேயே தொடர்ந்து வாழ முடியும் என்று அவர் பத்திரிகைகளுக்கு விளக்க அறிக்கையும் முன்பு கொடுத்திருக்கிறார். எனவே என்னதான் அவர் அறிக்கை விட்டாலும் அவரது இதயம்—எங்கள் பக்கமே இருக்கும்!

ஃ

இ. சிவலிங்கம்
கல்மடு படிவம்
வவுனியா

கே: அகராதி இல்லாத மொழி எது?

ப: காதலர்கள் பேசும் மொழிக்கு அகராதி கிடையாது!

கே: வன்னிச் சிவா திடீரென அரசியலில் குதித்தமைக்கு காரணம் என்ன?

ப! தமிழ் ஈழத்தின் விடுதலையில் அவருக்குள்ள நாட்டமாக இருக்கும்!

ஃ

இராமானுஜம்,
ஹட்டன்.

கே! திடீரென 'பப்ளிசிட்டி' எடுக்கவிரும்புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: தமிழர் விடுதலைக்கூட்டணியின் 'தனிநாடு' கொள்கையை கண்டித்து ஓர் அறிக்கைவிடும் அரசாங்க ஊதுகுழல் பத்திரிகைகள் அனைத்தும் கொட்டையெழுத்துக்களில் அதைப் பிரசுரிக்கும்; அத்துடன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தி அறிக்கையிலும் திருப்பித் திருப்பி ஒலிபரப்பாகும். தொண்டமான் யுகத்தை முடித்துவிட்டோம் என்று வீராப்பு பேசியவர்கள், தனிநாட்டுக்கோரிக்கைக்கு எதிராக தொண்டமான் விடுத்த அறிக்கைக்கு கொடுத்த முக்கியத்துவத்தைக் கவனித்தீர்களா?

ஃ

து. மணிமாறன்,
மாதகல் இழக்கு
மாதகல்

கே: இன்றைய தமிழனின் தனிப்பெரும் குணம் என்ன?

ப! பிரச்சினையிலிருந்து ஒதுங்கியிருந்துகொண்டு 'திண்ணைவேதாந்தம்' பேசிக் காலம் கழிப்பது!

கே! மலரில் மணம் மிகுந்த மலர் எது? பழத்தில் சுவை மிகுந்த பழம் எது?

ப! கணவனுக்கு அவனது மனைவி; காதலனுக்கு அவனது காதலி; தாய்க்கு அவளது குழந்தை!

ஃ

க. சுப்பிரமணியம்,
கிரான்குளம்
குருக்கள் மடம்

கே! தமிழ்பேசும் மக்களுக்கு விடுதலை கிடைக்குமா? அல்லது கிடையாதா?

ப! குருவிச் சாத்திரம் பார்த்து பெறுவதல்ல விடுதலை! குருதியால் எழுதப் படவேண்டியது!

கே! காசி ஆனந்தன் சிறையில் இருந்து எப்பொழுது வெளிவருவார்?

ப! சிறைச்சாலையின்சாவிக்கொத்து எனது கையிலிருந்தால்! அடுத்த விநாடியே வருவார்!

ஃ

எம். அழகராஜா
களுதாவளை
மாத்தளை

கே! தமிழன் தமிழனையே பிற இனத்தவரிடம் கேவலமாக பேசுகிறான். தமிழன், தமிழனையே காட்டிக் கொடுக்கின்றான். தமிழனே தமிழன் பிற இனத்தவர்களால் துன்புறுத்தப்படும் போது சந்தோசப்படுகிறான் இப்படியான தமிழனை, தமிழனே திருத்தும் காலம் வராதா?

ப: விரைவில் வரும்! அமரர் நாகநாதன் இறக்கும் முன்னர் தமிழனுக்குக்கூறிய புத்திமதியை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். "தமிழனுக்கு அடிக்கிறவனை அடிக்காத தமிழனை அடி!"

ஃ

மு, உமைரு,
கிண்ணியா.

கே: அடுத்த முறை எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும் என்று சொல்லமுடியுமா?

ப: ஓ முடியுமே! ஒரு சிங்களக் கட்சி!

கே: பந்தம் பிடிப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.

ப: சொந்த திறமையில் நம்பிக்கையில்லாதவர்கள்!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயகா வீதி.
கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடுப்புக்காவலில் பத்து நாட்கள்

சுதந்திரம் பிறப்புரிமை என்பதைச் சொல்லளவில் மட்டுமன்றி அனுபவத்தினாலும் உணரவேண்டுமெனின் தடுப்புக்காவலிலோ சிறைக் காவலிலோ இருத்தல் இன்றியமையாதது. திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அம்மையாரின் ஆட்சியில் அவரின் விருந்தினராகக்கொழும்பிலுள்ள பாசற் வீதித் தடுப்பு முகாமில் நான் அடைக்கப்பட்டிருந்த பொழுது இந்தக் கருத்துத்தான் தலை தூக்கிற்று.

எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எவர் முன்னிலையிலும், எவ்வித அச்சமுமின்றி விரும்பிய எதனையும் கூறும் வாய்ப்பும் வன்மையும், எதனையும் கண்டிக்கும் துணிவும் பாராளுமன்ற உறுப்பினருக்கு உண்டு. தேசிய அரசுப் பேரவையில் பிரதம அமைச்சர்தொடக்கம் எல்லா அமைச்சர்களையும் தட்டிக்கேட்கும் வாய்ப்பும், அமைச்சர்களும் அவர்களுடைய பொறுப்பிலுள்ள உத்தியோகத்தர்களும்செய்யும் தவறுகளையோ அநீதிகளையோ அஞ்சாமலும் அசையாமலும் எடுத்துக் காட்டி இடித்துரைக்கும்



உரிமையும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. மக்களின் பிரதிநிதிகளை ஓர் அரசாங்கம் அரசியல் போராட்டத்தை நடத்தியமைக்காகத் தடுப்புக்காவலிலோ, சிறையிலோ வைக்கிறதெனின் மக்களிற் பெரும்பாலாரைச் சிறைபிலிடுவதாகவே கொள்ளப்படும்.

இலங்கையை இன்று திருமதி பண்டாரநாயக்கா அவசர காலச் சட்டங்களாலேயே அடக்கி ஆளுகின்றார். முழு ஆட்சிக்காலமும் அவசரகாலச் சட்டங்களின் துணைகொண்டு ஆண்டார் என்ற பழிச்சொல்லுக்குத் தம்மை ஆளாக்கி வருகின்றார் அவர். அவரும் அவருடைய அமைச்சர்களும் பரிவாரங்களும் துள்ளிக் குதித்தாலும் அவசரகாலச் சட்டங்களின் துணையின்றி நாட்டை ஆள முடியாத அரசாங்கம் இந்த அரசாங்கம் என்பதை உலகம் முழுவதும் அறியும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குதற்காகவும் அவசரகாலச் சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன; இந்தச் சட்டங்களின் துணையினாலேயே தமிழ் இளைஞர்கள் பலரை விசாரணையின்றிச் சிறையிலடைத்து வைத்துச் "சித்திரவதை" செய்கின்றது இந்தச் சிங்கள ஏகாதிபத்தியம். இளைஞர்களைப்போல எங்களையும் — தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களையும்—கைது செய்தற்கு வாய்ப்பளிக்க நாங்கள் பலமுறை சட்ட மறுப்பு இயக்கங்களை நடத்தினோம். சிதைந்த முத்திரையினை ஒட்டிப்பிரதம அமைச்சருக்குக் கடிதங்களை அனுப்பினோம். பொலிசாருக்கு அறிவித்தல் கொடுத்துப்பல முறை துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினோம். சட்டவிரோதமாக பாடசாலை நடத்தினோம். நமது விடுதலை இலட்சியப் பிரகடனத்தை மாநாடு கூட்டிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிட்டோம். பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் துடிப்பும் துணிவுமுள்ள இளைஞர்களுக்கு மட்டும் வலை வீசிக்கொண்டிருந்தது; சட்டங்களை மீறும் தலைவர்களைப் பிடித்து அடைத்ததற்கு அது துணியவில்லை.

இந்த நாட்டில் சிங்கள மக்களின் பிரதிநிதி உருவாக்கிய யாப்பு தமிழ் இனத்தை அடிமைப்படுத்தும் சாசனம் என்பதை நன்கு உணர்ந்த தமிழ் மக்களும் தலைவர்களும் ஒன்றுபட்டுத் தங்கள் உரிமைகளுக்குப் போராடவேண்டும் என்று ஆவல்கொண்டனர். இந்த ஆவலினால் உந்தப்பட்டுத் தமிழர்களின் பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தமிழர் கூட்டணியை 1972இல் நிறுவினர்.

தமிழர் கூட்டணி புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பலமுனைகளில் எதிர்த்தது. அதனைத்திருத்துமாறு ஆறுஅம்சக்கோரிக்கையினை அரசாங்கத்துக்கு விடுத்தது. அரசாங்கம் சிறிதும் அசையவில்லை.

அரசாங்கத்தை அசையச் செய்வதற்கு மட்டுமன்றி உலகத்தின் கவனத்தையும் ஈர்த்தற்குத் தந்தை செல்வா தமது பாராளுமன்றப் பதவியினைத் துறந்து அரசாங்கத்துக்குச் 'சவால்' விட்டார். உடனே இடைத்தேர்தலை நடத்த அரசாங்கம் அஞ்சியது. எவ்வளவு காலம் இந்தத் தேர்தலைப் பின் போடலாமோ அவ்வளவு காலம் பின் போட்டது. மேலும் பின் போட முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டமையால் இடைத்தேர்தலை நடத்திற்று. தந்தை செல்வாவுடன் அரசாங்கச் சார்பில் திரு. வ. பொன்னம்பலம் போட்டியிட்டார். அமைச்சர்கள் வீடு வீடாகவுஞ் சென்று திரு. பொன்னம்பலத்துக்கு வாக்குக் கேட்டார்கள். அம்மையாரும் திரு. பொன்னம்பலத்தை ஆதரிக்குமாறு அறிக்கை விட்டார்.

தேர்தலிலே "தமிழர் தம்மைத் தாமே ஆளவேண்டும்" என்ற கோரிக்கையை முற்ற முடிந்த கொள்கையை உருவாக்கி நிலைபெற்றது.

பண்டிதர் கா. பொ. இரத்தினம்

அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை என்பதை நிலைநாட்டுவதற்கு உண்டாக்கப்பட்ட இடைத்தேர்தல் தமிழருக்கு விடுதலை வேண்டும் என்று கோரிக்கையாக நிலைநாட்டியது. தேர்தலில் தந்தை செல்வாவின் பெருவெற்றி, இதுதான் தமிழ் மக்களின் இதய வேட்கை என்பதை உறுதிப்படுத்தியது.

தமிழ் மக்களுடைய அரசியல் வரலாற்றிலே இது ஒரு முடிவான திருப்பமாகும். சிறுபான்மை இனம் தன்னாட்சி பற்றி எண்ணி முடிவு செய்தற்குப் பல படிகளை ஏறிக்கடக்கவேண்டும். ஏறிக்கடந்து விட்டால் அதன் விடுதலைக் கொள்கையை எந்தச் சக்தியாலும் மாற்ற முடியாது. இலங்கையின் இரண்டாவது பெரிய இனமான தமிழ் இனம் பல ஆண்டுகளாகப் பல இன்னல்களை அடைந்து அசையாமலும் அஞ்சாமலும் பல படிகளைக் கடந்து இன விடுதலை எனும் கடைசிப்படியை அடைந்து விட்டது. இந்தக் கடைசிப்படியிலிருந்து தமிழினத்தை இறக்குதற்கு எந்தச் சிங்கள ஏகாதிபத்தியத்தாலும் இனி முடியாது.

தமிழினத்தின் சுதந்திரத்தையும் விடுதலையையும் மீட்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிவு என்பதைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி விட்டோம். இந்தப் பிரகடனத் தீர்மானத்தைப் பத்திரிகைகளில் வெளியிடாமல் தடை செய்தது இந்த அரசாங்கம். எனவே எங்கள் சட்ட மறுப்புப் போராட்டத்தின் முதற்படியாக இந்தத் தீர்மானத்தை அச்சிட்டு மக்களுக்குப் பகிரங்கமாகக் கொடுப்பதென எங்கள் கூட்டணியின் நடவடிக்கைக் குழு முடிவு செய்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரகடனத்தை அச்சிடுவதற்கு அச்சகங்கள் மறுத்துவிட்டன. அவசர காலச் சட்டத்தின்படி இதனை அச்சிடும் அச்சகங்களை அரசாங்கம் பறித்தெடுத்துக்கொண்டு அச்சக உரிமையாளர்களைத் தண்டிக்கலாம், எனவே பல இடையூறுகளைக் கடந்து தமது அரசியல் பிரகடனத் தீர்மானத்தை அச்சிடுவித்தோம். அச்சிடும் பொழுதும் பொலிசாரின் தலையீட்டால் பேரதிப அளவு அச்சிட முடியவில்லை.

த. வி. கூட்டணியின் போராட்டம் காந்திய வழியில் அகிம்சை நெறியினைத் தழுவியது. எனவே நாங்கள் செய்யப்போகும் சட்டமறுப்பினை அரசாங்கத்துக்கு முன்னரே அறிவிப்பது எங்கள் கடமைகளில் ஒன்றாகும். அரசாங்கத்துக்கும் பொலிசாருக்கும் 22-5-76 சனிக்கிழமை நமது விடுதலைத் தீர்மானத்தைக் கொண்ட துண்டு இதழ்கள் யாழ்ப்பாண நகரில் குறிப்பிட்ட இடங்களில் வழங்கப்படும் என முறையாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நகரில் மூன்றுகுழுவினராகப்பிரிந்து இந்தத் துண்டு இதழ்களைக் கொடுத்தோம். முதலாவது குழு தந்தை செல்வநாயகம் தலைமையில் திரு. அ. அமிர்தலிங்கம் திரு. ச. தம்பித்துரை திரு. இ. விசுவநாதன் முதலானோரைக் கொண்டது. இரண்டாவது குழு திரு. வ. ந. நவரத்தினம் தலைமையில் திரு. க. துரைரத்தினம் முதலானோரைக் கொண்டது. மூன்றாவது குழுவுக்குத் திரு. தருமலிங்கம் பொறுப்பாக இருந்தார். இந்தக் குழுவிலேயே திரு. மு. சிவசிதம்பரமும் நானும் இருந்தோம். நாங்கள் முதலில் வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலுக்குச் சென்றோம். கடவுள் வழிபாட்டின்பின் ஈழநாடு அலுவலகத்துக்குச் சென்று அங்கிருந்த துணை ஆசிரியரிடம் துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தோம்.

—தொடரும்.

# சுதந்திரம் பெறுவதற்கு சுலபமான வழி எது?

சுதந்திரம் பெறுவதற்கு ஆயுதமேந்திப் புரட்சி செய்வதைத்தவிர வேறு வழி கிடையாது என்றே நான் அரசியல் வாழ்க்கையில் புகுந்தபொழுது எண்ணினேன். என்னைப் போலவே தான் அந்தக் காலத்திலிருந்த அறிஞர்கள் எல்லோரும் எண்ணினார்கள். ஆனால் போர் முறை அதிகமாக முன்னேற்றம் அடைந்துவிட்டபடியால், அதைக் கையாள்வது என்பது அசாத்தியமான காரியம் என்பதையும் நாங்கள் உணர்ந்திருந்தோம். போர் தொடுத்து சுதந்திரம் பெறமுடியாது என்பதை உணரவே நாங்கள் என்ன செய்வதுஎன்பதுதெரியாமல்திகைத்துநின்றோம்.

ஒரு நாள் நண்பர் ஒருவர் வீட்டில் கழிவுக்காகிதங்கள் போடும் கூடையில் ஒருசிறு புத்தகத்தைக் கண்டேன். அது தோரோ என்னும் அமெரிக்கர் எழுதிய "சாத்வீக சட்டமறுப்பு" என்னும் நூல். அதைப் படித்தேன். வெகு சுவையுடையதாயிருந்தது. எனக்கு ஒரு புது விழிப்பு ஏற்பட்டது, அதே சமயத்தில் மகாத்மா காந்தியடிகள் தென் ஆபிரிக்காவில் செய்துவந்த காரியங்கள் பத்திரிகைகளில் வெளியாகின. அவர் தோரோவின் தத்துவங்களையும் டால்ஸ்டாயின் தத்துவங்களையும் இந்திய அரசியலில் எப்படிக் கையாளலாம் என்னும் முறையைக் கண்டுபிடித்துவிட்டார்.

நாம் சம்மதிக்காவிட்டால், அந்நியர் நம்மை ஆளமுடியாது என்னும் உண்மையை அவர் கண்டுபிடித்துவிட்டார். நாம் சம்மதிக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டால் அந்தக் கணமே அரசாங்கம் முறிந்துபோக வேண்டியதேயாகும். தென் ஆபிரிக்காவில் அவர் நடத்திய போராட்டத்தை வாசித்ததும் அதே ஆயுதத்தை ஏந்தினால் இந்தியாவும் வெற்றிபெற்றுவிடலாம் என்பதை உணர்ந்தோம்.

— மூதறிஞர் ராஜாஜி
(நன்றி: கல்கி 30 5 76)


# சுடர்

வைகாசி இதழ் இப்போது
எங்கும் விற்பனையாகிறது
விலை ரூபா 1—00.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஒரு வார்த்தை!

சுதந்திரம் புனிதமானது!

சுதந்திரத்துக்காக ஒரு தேசிய இனம் போராடுகிற காலம், அந்த இனத்தின் வரலாற்றிலேயே புனிதமான தொரு கால கட்டம்!

நெஞ்சை நெகிழவைக்கும் நிகழ்ச்சிகளும் மயிர்க் கூச்செறியும் தியாகங்களும் சுதந்திரப்போராட்ட காலத்திலேதான் சம்பவிக்கின்றன.

சுதந்திரத்தின் மீது ஒரு தேசிய இனம் வைத்திருக்கும் பக்தியை—வாஞ்சையை—இந்தக்கால கட்டத்திலே தான் உணர முடியும்!

புனிதமான இந்த சுதந்திர இயக்கத்தை நடத்திச் செல்லும் தலைவர்களும் புனிதமானவர்களாக இருக்க வேண்டும்; மக்களின் விசுவாசத்துக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரவாளிகளாக இருக்கவேண்டும்!

காந்தியடிகளின் புனிதமான தியாகம் இந்தியாவின் முப்பது கோடி மக்களையும் அவர் பின்னால் அணிதிரள வைத்தது.

ஈழத் தமிழ்த் தேசிய இனம் இப்போது தான் பூரண சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறது, வட்டுக் கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி விடுத்த அரசியல் பிரகடனம் தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரக்கோரிக்கையாக அமைந்துள்ளது!

சுதந்திரம் என்ற புனிதமான — தெய்வீகமான ஒரு இலக்கை வைத்து தமிழ் தேசிய இனம் விடுதலை யாத்திரையை மேற்கொண்டிருக்கிறது!

இந்த புனித யாத்திரையில், கற்களும் முட்களும், கானுறும், கடும்புலியும், கரடியும், சிங்கமும் குறுக்கிடலாம்; நெருப்பாற்றை நீந்திக்கடக்க நேரிடலாம்; இடைவழியிற் பலரை இழக்க நேரிடலாம்; சிறைச்சாலைகள், சித்திரவதைகள், சொத்துப்பறிமுதல், நாடுகடத்தப்படுதல், ஆயுள் தண்டனை, ஏன் தூக்குமேடை கூட ஏற வேண்டியேற்படலாம், இவற்றையெல்லாம் மனநிறைவுடன், கலக்கமோ தயக்கமோ கவலையோ இன்றிக் கடந்து சென்றால்தான்—சுதந்திரதேவியின் புனிதமான தரிசனம் கிட்ட முடியும்!

இப்படியான மகோன்னதமான ஒரு விடுதலைப் போராட்டத்தைக்கொண்டு நடத்தவேண்டிய புனிதமான பாரிய பொறுப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தத் தர்மப்போரைக்கொண்டு நடத்துவதற்கு முன்னிற்கும் தலைவர்கள் புனிதமானவர்களாக — தூய்மையானவர்களாக-மக்களின் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக விளங்கவேண்டியது அவசியம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய முன்னணித்தலைவர்கள் பலர் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக எத்தனையோ இயக்கங்களை நடத்தியவர்கள் — சிறைச்சாலைகளைக் கண்டவர்கள் — சொத்து சுகங்களை இழந்தவர்கள் — தியாகவரலாறுபடைத்தவர்கள்; மக்களின் விசுவாசத்தையும் நம்பிக்கையும் பெற்றுள்ளவர்கள் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

இவ்வாறு தூய்மையும் புனிதமும் உள்ள தலைவர்களால் வழி நடத்தப்பட வேண்டிய இயக்கத்தில் வந்தான் வரத்தான்களுக்கோ—நேற்றுவரை மாற்றானுடன் சேர்ந்து இனத்தைக் காட்டிக் கொடுத்த புல்லுருவிகளுக்கோ — இடமளித்து இயக்கத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்தும் எந்தவித முயற்சியையும் தமிழ் பேசும் மக்கள் துளியும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்!

தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையின் அடிப்படையில் உருவான கூட்டமைப்பு; தங்கள் தவறை உணர்ந்து திருந்தி வருபவர்களுக்கு இதில் இடமளிப்பதில் தவறென்ன என்று கேட்கப்படுமானால்—அதைத் தவறென்று நாம் கூறவரவில்லை! ஆனால் ஒற்றுமைக்காக கட்டியணைப்பது வேறு; விடுதலை இயக்கத்தை நடத்திச் செல்லும் அமைப்பில் அப்படிப் பட்டவர்களுக்குப் பங்களிப்பது வேறு என்பதையே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவாளராக அனுதாபியாக—எவரும் இருந்து விட்டுப் போகட்டும்; நேற்று வரை தமிழ் சமுதாயத்துக்கு துரோகம் செய்தவன் கூட இன்று திருந்தி கூட்டணியின் ஆதரவாளனாக மாற முடியும்; அப்படி மாறுவதையே நாமும் விரும்பி வரவேற்கிறோம்!

ஆனால் விடுதலை இயக்கத்தில்—அதை நடத்திச் செல்லுகின்ற அமைப்பில்—இப்படிப்பட்டவர்களுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி இடமளிக்குமானால்—இயக்கத்தின் புனிதம் கெடுவதுடன், மக்களின் விசுவாசத்தையும் இழக்கவே நேரிடும்.

இது காலவரை பாதைமாறிச் சென்றவர்கள் எவராவது திருந்தி உண்மையாகவே மனமாற்றமடைந்து—தமிழர் விடுதலைக் கூட்டணியின் பக்கம் வருவார்களானால் — அவர்களைத் தாழ்வாரத்திலே சில காலங்களுக்கு வைத்திருந்து—அவர்களது நடவடிக்கைகளை சில காலமாவது நுணுகி அவதானித்து—பொதுமக்கள் அவர்கள் மீது கொண்டிருந்த அவநம்பிக்கை முற்றாக நீங்கிய பின்னரே, அப்படிப்பட்டவர்களை கூட்டணியின் உள்ளே அனுமதிக்கவேண்டும்!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், கூட்டணியின் உறுப்புக்கட்சிகளுக்கும் தமிழ் பேசும் மக்களின் சார்பில் இதையே இடித்துக்கூறவிரும்புகிறோம். சுதந்திர இயக்கத்தின் புனிதம் காப்பாற்றப்படவேண்டும்; அதை எந்த வகையிலும் சோரம்போகவிட்டுவிடக்கூடாது!

# ஆறு அம்சத்துக்கு பதிலில்லை

# 12 அம்சம் பேச்சுமூச்சுமில்லை!

## 20 அம்சத்தின் எதிர்காலம் என்ன?

1948ம் ஆண்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர்—கடந்த கால் நூற்றாண்டாக மாறி மாறி ஆட்சி பீடமேறிய சிங்கள அரசாங்கங்களுடன், ஐக்கிய இலங்கையின் கீழ் சிங்களவர்களுடன் சமத்துவமாக வாழலாம் என்ற நம்பிக்கையின் பேரில் தமிழ் தேசிய இனத்தின் தலைவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகள் ஒப்பந்தங்கள், பொருத்தங்கள் அனைத்தும் சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டு விட்டன. தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை வழங்கி, தமிழ் மக்களும் இந் நாட்டை ஆள்வதற்கு சம உரிமையுடையவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுடன் நேசபூர்வமாக, வாழு, வாழவிடு என்ற உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் வாழுவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை; தமிழ் தேசிய இனத்தின் தனித்துவத்தை அழித்தொழித்து அவர்களை அடிமைகளாக்கி இரண்டாந்தரப் பிரஜைகளாக — ஆளப்படும் இனமாக வைத்துக்கொள்ளவே சிங்களமக்களும், அவர் தம் தலைவர்களும் உள்ளூர விரும்பி அதற்கான செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற கசப்பான உண்மையை தமிழ் தேசிய இனம் இன்று நன்கு உணர்ந்து தெளிந்து விட்டது. இந் நாட்டில் தேசிய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் தமிழ் தேசிய இனத்தின் மொழி கலை,கலாசாரம் பிரதேசம் ஆகியவற்றின் அழிவின்மீது கட்டியெழுப்புவதே சிங்களத் தலைவர்களின் நோக்கம் என்பது இப்போது துலாம்பரமாகத் தெரிந்துவிட்டது.

எனவேதான், தமிழ் பேசும் மக்கள் தாம் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது மறுக்க முடியாத சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி, தன்னைத் தானே ஆளுவது என்கிற முடிவை செயற்படுத்த தீர்மானித்து விட்டது. இதன் பிரதிபலிப்பே தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டு அரசியல் பிரகடனம்.

### 20 அம்சம்

பேச்சுவார்த்தை நடத்தி, சில சலுகைகளை அப்போதைக்கப்போது பெற்றுக் கொள்வதனாலோ, ஏன் அரசியல் சட்டத்தின் மூலம் சில உரிமைகளை பெற்றுக்கொள்வதனாலும்கூட இவற்றால் நடைமுறையில் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைகள் தீரப்போவதில்லையென்பதை நன்கு உணர்ந்துதான் தமிழ் தேசிய இனம் மேற்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறது.

இருந்த போதிலும் தமிழ் பேசும் மக்களில் இன்னும் சிலருக்கு — குறிப்பாக கொழும்பில் இருக்கும் சாய்மனை அரசியல் வாதி [illegible] தேசிய ஒருமைப்பாட்டிலும் இன்னும் நம்பிக்கை விட்டுப் போனதாகத் தெரியவில்லை. இன்னும் அவர்கள் நம்புகிறார்கள்; அவர்களது இந்த நம்பிக்கை வெறும் 'கானல் நீர்' தான் என்பதைக் காலம் அவர்களுக்கு உணர்த்தும்.

இப்படிப்பட்ட 'பிரமுகர்கள்' நாற்பதுபேர் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினை பற்றி பிரதமருக்கு 20 அம்சத் திட்டமொன்றை அனுப்பி வைத்திருப்பதாக 9-6-76 நாளேடுகள் செய்தி வெளியிட்டு, அந்த 20 அம்சத்தையும் பிரசுரித்துமுள்ளன.

### ஆறு அம்சமும் 12 அம்சமும்

1972ம் ஆண்டு தமிழ் பேசும் மக்களின் சார்பாக தமிழர் கூட்டணி விடுத்த ஆறு அம்சக் கோரிக்கையை குப்பைக் கூடைக்குள் வீசிய அரசு, இந்த 20 அம்சத்தை அதற்கு என்ன செய்யப்போகிறதோ தெரியவில்லை:

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் என்று தம்மைக் கூறுபவர்கள் இதோ வந்து விட்டது 12 அம்சம் என்றார்கள்; அமைச்சர்கள் சிலர் அதைஏற்றுக்கொண்டு விட்டதாகவும் கூறினார்கள்; என்ன நடைபெற்றது என்று தெரியவில்லை.

இப்போது 20 அம்சத் திட்டம் சந்திக்கு வந்திருக்கிறது. இந்த 20 அம்சத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள ஒருசில அம்சங்கள் உருப்படியாக அமைந்திருக்கின்றன என்பதை நாம் மறுக்கவில்லை;

(1) அரசியல் சாசனத்தில் 3ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட 1958ன் 28ம் இலக்கத் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டமும் அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளும், தமிழை இலங்கையின் ஒரு தேசிய மொழியாக்குவதற்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகமொழியாக்குவதற்கும் வேண்டிய மாற்றங்கள், சேர்க்கைகளுடன் அரசியல் சாசனத்திலிடம்பெறவேண்டும்.

(குறிப்பு:- இச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 1966ம் ஆண்டின் தமிழ்மொழி விசேட பிரமாணங்கள் அரசியல் சட்டத்தின் ஓரம்சமாக கருதப்படமாட்டாது என்பது அரசியல் சாசனத்திலேயே கூறப்பட்டுவிட்டது.)

(2) வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நீதிமன்றங்களில் தமிழ்மொழியின் உபயோகத்துக்கு அரசியல் சாசனத்தின் மூலம் ஏற்பாடு செய்தல்வேண்டும்.

(3) அரசியல் சாசனத்தின் 6ம் அத்தியாயத்திலுள்ள அடிப்படை உரிமைகளை செயலாக்குவதற்காக உயர்நீதிமன்றத்தினைக் கோரும் உரிமைக்கு அச்சாசனத்திலேயே உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

(4) சபைகள், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுறவு சங்கங்கள், வேலை மாற்றுக் கந்தோர்கள் போக்குவரத்துத் தாபனங்கள், மருத்துவமனைகள், வங்கிகள் அஞ்சல் அலுவலகங்கள்,காவல்துறைநிலையங்கள் ஆகியன உட்பட சகல அரசாங்க திணைக்களங்கள் நிறுவனங்களும். அரசாங்கத்தை மருவிய மற்றைய அலுவலகங்கள், தாபனங்களும், தமிழ்பேசும் மக்களுடன் தனிப்பட்ட முறையிலோ—கூட்டாகவோ-மேற்கொள்ளும் பேச்சு, கடிதத்தொடர்புகள் பரிவர்த்தனைகள் எல்லாம் நாடு முழுவதிலும், தமிழ்மொழி மூலமே ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும்.

(5) தமிழ் பேசும் பாடசாலை சிறார்களுக்கு தமிழ் மொழி மூலம் கல்வி பயில உள்ள உரிமை மாற்றப்பட முடியாதென உறுதி செய்யப்படவேண்டும்.

(6) தமிழ் பேசும் மக்களுக்கு பொதுவாக கல்வித்துறையிலும் விசேடமாக உயர்கல்வித்துறையிலும்;(1) பரீட்சைகளில் புள்ளிகளின் அடிப்படையில் திறமைக்கு முதன்மை அளித்தல் (2) மொழிவழித் தரப்படுத்தலை ஒழித்தல்,

ஆகிய மேற்கண்ட ஆறு அம்சங்களும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரச்சினையை யொட்டிய அம்சங்களும் ஓரளவு வரவேற்கக் கூடியன என்றாலும், இத் திட்டத்தில் தரப்பட்டிருக்கும் "தமிழுக்கு மொழி பெயர்ப்பு வழங்கப்பட வேண்டும்" என்னும் நிலையையும், இன்னும் ஏனைய சில அம்சங்களையும் மானமுள்ள எந்தத் தமிழ் மகனும் ஏற்க முடியாது.

தமிழ் தேசிய இனத்தின் இன்றைய அவசரமானதும், அவசியமானதும் அதிமுக்கிய பிரச்சினையுமான தமிழ் நிலப் பாதுகாப்பு குறித்து— திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்துவது குறித்து—மெத்தப் படித்தவர்கள் தயாரித்துள்ள இந்த 20 அம்சத்திட்டத்தில் எதுவுமே இடம் பெறாதது சுட்டிக்காட்டத்தக்கது. மொழியை விட பிரதேசப்பாதுகாப்பே ஒரு இனத்தின் வாழ்வுக்கு அதிமுக்கியமானது என்பதை இவர்கள் உணராதது ஏனோ?

மேற்கண்ட 20 அம்சத்திட்டத்தில் மொழிபற்றிக் கூறப்பட்ட அம்சங்கள், பெரும்பாலும் 1966ம் ஆண்டின் தமிழ்மொழி பிரமாணங்களில் இடம்பெற்றவையே. குறித்த தமிழ்மொழிப் பிரமாணங்களை அமுல்படுத்த முடியாது என்று அரசு அறிவித்துவிட்டதுடன், இப்பிரமாணங்கள் அரசியல் சட்டத்தின் அம்சமாக எவ்

—5-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிவகுமாரனுக்கு தனியிடமுண்டு!’’



## நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் நாவலர் பேச்சு!

‘தியாகிசிவகுமாரன் இளம் காளையாக உயிரோடு வாழ்ந்தபோது மட்டுமல்ல அவன் வீர மரணமடைந்து கல்லுருவில் சிலையாகிவிட்ட பின்பும் அவனுக்கு சிறிமாவோ அரசு பயப்படுவதை அக்கம் பக்கம் பார்த்தாலே நீங்கள் புரிந்து கொள்ளுவீர்கள்’’

என்று தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் 5-6-76 நடைபெற்ற கூட்டத்தில் பலத்த கரகோஷத்தின் மத்தியில் கூறினார்.

அவர்மேலும் கூறியதாவது:-

“சிவகுமாரன் நினைவு நாள் கூட்டத்துக்கு மக்கள் செல்வதைத் தடைசெய்யும் சதி நோக்கத்துடன் பஸ்சேவைகள் அனைத்தும் மாலை 6-30 மணியுடன் நிறுத்தப்படுவதாக அதிகாலை முதற் கொண்டே யாழ் பஸ் நிலைய ஒலிபெருக்கிமூலம் அடிக்கடி அறிவிக்கப்பட்டது. உரும்பிராய்ப் பட்டினமே ஒரு யுத்தகளம் போல ஆயுதபாணிகளான பொலீசாரால் நிரப்பப்பட்டுள்ளது. எத்திசை திரும்பினாலும் பொலிஸ் வாகனங்கள் இரகசியப்பொலிசார், சாதாரண உடையிலுள்ள பொலிசார் என்று சாரிசாரியாக பொலிசாரால் சூழப்பட்டிருந்தும் சிவகுமாரன் சிலைக்கு மரியாதை செய்வதற்கும், தியாகி சிவகுமாரனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும் ஆயிரக்கணக்கில் திரண்டிருக்கிறீர்கள். சிறப்பாக பெண்கள் பெருந் தொகையினர் இங்கு கைக் குழந்தைகளுடன் வந்திருப்பதொன்றே பொலிசாரின் அடக்கு முறைக்கு அடங்கிப் போகிறவர்கள் அல்ல தமிழர் பரம்பரை என்பதைப் பார் அறியப் பறை சாற்றப், போதுமானது. கூட்டத்துக்கோ ஒலி பெருக்கி உபயோகிக்க அனுமதி இல்லை. இத்தனை கெடுபிடிகள் மத்தியிலும்எத்தனை உணர்ச்சியுடன் கூடியிருக்கிறீர்கள்.

உணர்ச்சியைக் காட்டாது, வெள்ளம்போல் பாயவிடாது, கட்டுப்படுத்தி தலைவர்கள் சொல்லும் போது எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெறும் சாத்வீக சட்டமறுப்பு இயக்கங்களில் நீங்கள் யாவரும் பங்காளர்களாகக் கலந்து கொள்ளவேண்டும். பார்வையாளர்களாக நீங்கள்யாரும் இருக்கமாட்டீர்கள். இக் கூட்டமே அதற்கு எடுத்துக் காட்டு பொலிசாரின் தொகையையும் ஆயுத பாணிகளாக அவர்கள் முகாமிட்டிருப்பதையும் கண்டு கூட்டத்திற்கு ஆள்சேரமாட்டாது, பொது மக்கள் ஒதுங்கிக்கொள்வார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டவர்களை ஏமாற்றி விட்டு இங்கு ஆயிரக்கணக்கில் கூடியிருக்கிறீர்கள்.

“கடந்த இரு வாரங்களுக்கு முன் நடைபெற்ற சட்ட மறுப்பின்போது கைதுசெய்யப்பட்டு பத்து நாட்கள் அம்மாவின் விருந்தினராக இருந்துவிட்டு இப்போது தான் வெளியே வந்துள்ளோம் மீண்டும் அங்கு போவதற்கான நாட்களை எண்ணிக் கொண்டு தான் நாம் இருக்கின்றோம்.

“கடந்த வருடம் சிவகுமாரன் சிலையைத் திறந்து வைத்த இளைஞன், தம்பி முத்துக்குமாரசுவாமி, சிலைத் திறப்புவைபவத்தில் உரை நிகழ்த்திய உணர்ச்சிக் கவிஞன் காசி ஆனந்தன் ஆகியோர் தியாகி சிவகுமாரன் சிலைத் திறப்பு விழாவிற்குச் சில நாட்கள் முன்பாக விடுதலைபெற்று வெளியே வந்திருந்தனர். ஏதோ சிறு விடு முறையில் வந்தவர்கள் போல சிலைத் திறப்புவிழாவின் பின் மீண்டும் அவர்கள் அம்மாவின் சிறைக்குத் திரும்பிவிட்டார்கள், அவரோடு இன்னும் பல இளைஞர்கள் தம்பி புஷ்பராசா, தம்பி வரதராசா போன்றவர்கள்— ஐம்பதுக்கும்மேற்பட்டவர்கள் சிறையில் தவம் இருந்து வருகின்றனர்.

“உரும்பிராய்மண் பெரும் புண்ணியம் செய்த பூமி எதிர்காலத்தில் தமிழ் ஈழத்துக்கு வருகை தருவோர் யாவரும் உரும்பிராய் மண்ணுக்கு வணக்கம் தெரிவிக்க இங்கு வருவர். தியாகி சிவகுமாரனால் உரும்பிராய் பெருமைபெற்றுள்ளது’’ என்று திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் முன்னாள் உப சபாநாயகரும், தமிழர் விடுதலை முன்னணியின் கூட்டுச்செயலதிருமான திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது!

‘‘நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்உயிரிழந்த தமிழர்களது நினைவாகநிறுவப்பட்ட நினைவுச் சின்னத்தை இரண்டு தடவை தகர்த்தார்கள். ஆனால் சிங்கத் தமிழன் சிவகுமாரன் சிலையைத் தீண்ட யாரும் துணியவில்லை. கல்லுருவில் கம்பீரமாகத்தோற்றம் தரும் தம்பி சிவகுமாரனைக் கண்டு— இந்த அரசுக்கு எத்தனை பீதி என்பதற்கு அத்தாட்சியாக உரும்பிராயில் காட்சி தரும் பொலிசாரின் தொகையைப் பார்த்தாலே போதும்!

‘‘ஒன்றுபட்ட தமிழினத்தை கூறுபோட இனியாரையும் அனுமதிக்க மாட்டோம். கடந்த மே22 சட்ட மறுப்பின்போது தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களைக் கைதுசெய்யத் தவறியது அரசாங்கம். தமிழரசுக் கட்சி மீது பழியைச் சுமத்த அரசு மேற்கொண்ட எத்தனத்தைத் தமிழ்க் காங்கிரஸ் தவிடுபொடியாக்கி விட்டது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது சட்ட மறுப்புப் போராட்டம் தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களால் மேற்கொள்ளப்பட்டது. தமிழர் விடுதலை கூட்டணியின் ஒற்றுமையை உலகுக்கும் சிறிமாவோவுக்கும் காட்டுவதற்காக. தம்பி சிவகுமாரன் பாதையிலே தொடருவதற்கு இளைஞர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைத் தலைவர்கள் காத்து நிற்பதால் இளைஞர்கள் அடங்கி நடக்கிறார்கள். இதைப் பலவீனமென்று யாரும் கருதக்கூடாது.’’

மற்றும் திரு. வி. ஆனந்தசங்கரி கிளிநொச்சி பா. உ., திரு. செ. இராசதுரை மட்டக்களப்பு பா.உ., மூதூர் பா. உ. தங்கத்துரை; ஊர்காவற்றுறை பா. உ- பண்டிதர் க. பொ. இரத்தினம், வவுனியா பா. உ, செல்லத்தம்பு, சாவகச்சேரி பா. உ. வி. நவரத்தினம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்,

—(தொகுப்பு:- உரும்பராய் ஆனந்தன்)

---

## ஆறு அம்சத்துக்கு ........

—4ம் பக்கத் தொடர்

வகையாகவேனும் கருதப் படலாகாது என்று திட்டமாகப்பொறித்தும் வைத்திருக்கிறது.

இதேபோல மொழிவாரித் தரப்படுத்தலை நீக்கவேண்டும் என்ற பீட்டர் கெனமன் சிபார்சையும் அண்மையில் நிராகரித்துவிட்டது.

இந்நிலையில் 20 அம்சத் திட்டத்தில் உள்ள உருப்படியான தமிழ்மக்களுக்கு சாதகமான மேற்கண்ட அம்சங்களை யார் ஏற்கப்போகிறார்கள்? இலகுகாத்த கிளியின் நிலையில் இருபது அம்சத் திட்டத்தில் பிதாமாரர்கள் ஏமாற வேண்டியதுதான்!

கல்லில் நார் உரிக்க முயற்சிக்கிறார்கள்; ஏதோ முயன்று பார்க்கட்டும்— நாம் அதற்கு குறுக்கே நிற்கப் போவதில்லை— அதே நேரத்தில் முடிந்தமுடிவான தமது விடுதலை இலட்சியத்தை விட்டு தமிழ் மக்கள் விலகப் போவதுமில்லை!

ஆனால் ஒன்று! கல்லில் நார் உரிக்கமுடியாதென்று காணும் பட்சத்தில் 20 அம்சத்திட்டத்தை தயாரித்த 40 பிரமுகர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளுவார்களா என்பதை மட்டும் அறியவிரும்புகிறோம்.

---

## 24 பேருக்கு இருவரே தமிழர்!

தற்காலிக உதவிப் பொலீஸ் சுப்ரிண்டெண்டன்களாக 24 பேர் யூன் முதல் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பதவி உயர்வு கிடைக்கப் பெற்ற 24 பேரில் ஆக இருவர் மட்டுமே தமிழர். அவர்களது பெயர் பி. இராஜேஸ்வரன், எஸ். அரசரெத்தினம்.

---

## நடவடிக்கை எடுக்க மாணவர்திட்டம்!

அண்மையில் நடைபெற்ற யாழ்மாவட்ட அரசியல் அதிகாரியும் கலந்து கொண்ட யாழ். கனகரத்தினம் மாவித்தியாலய இரவு விருந்தொன்றில், ‘சந்தன’ முட்டிகள் வீசப்பட்டன அல்லவா? அதை யொட்டி மேற்படி மாவித்தியாலயத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் வகுப்புக்களுக்கு செல்லக்கூடாதென்று தடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இதை யொட்டி அனைத்துக் கல்லூரி மாணவர்களும் நடவடிக்கையெடுப்பதற்கு ஆலோசித்து வருகின்றனர்.

---

## நித்தியானந்தா விடுதலைக்கூட்டணியில் சேர்ந்தார்!

பிரபல தொழிற்சங்கவாதியும், இடதுசாரி இயக்கத்தின் நீண்டகால ஆதரவாளருமான திரு. வே. வி. நித்தியானந்தா, தமிழ் ஈழக் கொள்கையை ஏற்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினராக சேர்ந்துள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையில் அவர் ஓர் உறுப்பினராக சேர்ந்திருக்கிறார்.

---

## கூட்டுச்சேரா மாநாட்டுக்...

—1-ம் பக்கத் தொடர்

யின் கிளர்ச்சிகளாலும் 1974ம் ஆண்டு டிசெம்பரிலிருந்து 1975ம் ஆண்டு யூன் வரை விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் அப்போதும் ஐந்து இளைஞர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் மீது வழக்குத் தொடரப்படும் என்று 1974 டிசெம்பரில் நீதியமைச்சர் தேசிய அரசுப் பேரவையில் அறிவித்திருந்தார். ஆனால் இதுவரை வழக்குத் தொடரப் படவும் இல்லை; விடுதலை செய்யப்படவுமில்லை.

இவ்வாறு இடையில் விடுதலையேதுமின்றி தொடர்ச்சியாக சிறையிருந்துவரும் இளைஞர்கள் திருவாளர்கள் அமரசிங்கம், ஞானசேகரன் திசைவீரசிங்கம், பொ. சத்தியசீலன் பீ.ஏ.., பூ. நடேசானந்தம் ஆகியோராவர். இவர்களில் திரு. அமரசிங்கம் 1972ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நான்கு முழு ஆண்டுகள் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். சத்தியசீலன், ஞானசேகரன், திசைவீரசிங்கம் ஆகியோர் 1973ம் ஆண்டிலிருந்து கடந்த மூன்றரை ஆண்டுகளாக உள்ளே வைக்கப்பட்டுள்ளனர். நடேசானந்தம் 1974 முதல் கடந்த இரண்டு ஆண்டாக காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

இதே சமயத்தில் 1975 யூலை இறுதியில் யாழ் மேயராக இருந்த திரு. துரையப்பா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்கெனவே இரண்டு ஆண்டுகள் தடுப்புக்காவலில் விசாரணையின்றி வைக்கப்பட்டிருந்து விடுதலை செய்யப்பட்ட 42 தமிழ் இளைஞர்களில் மிகப்பெரும்பாலோர் மீண்டும் கைதுசெய்யப்பட்டு சிறைகோட்டம் அனுப்பப்பட்டார்கள். இந்த 42 பேருடன் இன்னும் பல புதிய இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்களே இவர்களில் பெரும்பாலோர் தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சிலரும் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்,

இன்று வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், கண்டி போகம்பரை சிறைச்சாலை

—8ம் பக்கம் பார்க்க

---


எண்ணெய் முழுக்குக்கு,

ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள்.

தலையிலும் உடம்பிலுமுள்ள அழுக்கை நீக்கி நறுமணம் கமழச் செய்கிறது.

ஒரு பைக்கற் —/25 சதம் மட்டுமே.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒரேமொழி, ஒரேநாடு இதுவே பண்டா கொள்கை! இக்கொள்கையிலிருந்து இம்மியும் வழுவோம்!

# தமிழ்மொழிக்கு தரக்கூடியது தற்காலிக சலுகையே!

# தமிழ்மொழிப் பிரமாணங்கள் மீது பீலிக்ஸ் டயஸ்

## 1966ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை!

டட்லி—செல்வா ஒப்பந்தத்தின் பேருக தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்கள் 1966—தை—8 ஆம் நாள் நாடளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அப்போது இரு நாட்கள், ஏறத்தாழ நான்கு மணிநேரம் "சிந்தனை முற்ருக வற்றி, வரண்ட கிழட்டுக் கிராம வாத்தியார் போல எல்லையின்றி விவாதித்துக் கொண்டிருக்கும்" (திரு. மு. பாலசுந்தரம்—அஞ்சாட்டு. 1961 கார். 23 நிரல் 1852) திரு. பீலிக்ஸ் பண்டார நாயக்கா ஆற்றிய உரையின் தொகுப்பு இது.

இது சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொலை செய்துவிட்டதாகவும் தமிழுக்கு சம அந்தஸ்திலும் உயர்ந்த அந்தஸ்து வழங்கிவிட்டதாகவும் பீலிக்ஸ் நிலைநாட்ட முயன்ருர்.

"1958ஆம் ஆண்டில் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு அரசியல் அமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுள் தாயிருந்துவந்த, தமிழ் மொழி உபயோகத்துக்கான எதுவேனும் ஒழுங்கு விதி அரசியலமைப்பின் ஏற்பாடொன்ருக எவ்வகையிலேனும் பொருள் கொள்ளப்படலாகாது." [அரசியல் யாப்பு அத் 3, பகுதி 8 (2) பக் 5] எனக் கொல்வின் யாப்பில் 66 ஆம் ஆண்டுப் பிரமாணங்களை நிராகரிக்கும் விதி சேர்க்கப்பட்டுள்ளது.

66ஆம் ஆண்டுப் பிரமாணங்களின் அடிப்படையிற் பேச்சுவார்த்தை, தமிழ் உரிமை வழங்கல் என்பன வெறும் கண் துடைப்பு. அரசியல் யாப்பை மாற்ருத வரை இப்பிரமாணங்களை நடைமுறைப்படுத்தமுடியாது.

இம்மசோதாவை ஒட்டிப்பேசிய தந்தை செல்வா "இது சம அந்தஸ்துக்கு மிகவும் குறைந்தது. நிரந்தர ஏற்பாடாக ஏற்கமுடியாது" என்று குறிப்பிட்டதும் நினைவு கூரத் தக்கது.

"திரு, எஸ். டபிள்யூ ஆர்: டீ. பண்டார நாயக்கா மொழிச் சிக்கல் பற்றி ஆராய ஒரு குழுவை நிய மித்தார். இக்குழுவின் ஆய்வின் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது சிங்களமட்டும் கொள்கையை உருவாக்கியது. அதே காலத்தில் ஐ. தே. கட்சியும் தனது மீளாய்வை மேற்கொண்டது. அதுவேறு வகையில் தனது முடிவை மேற்கொண்டது. 1954இல் அப்போது முதலமைச்சராக இருந்த திரு' யோன். கொத்தலாவல தமிழுக்கும், சிங்களத்துக்கும்சம அந்தஸ்து என்ற ஐ. தே. கட்சியின் கொள்கையைக் கொக்குவிலில் பிரகடனம் செய்தார்.

காலஞ்சென்ற திரு; பண்டாரநாயக்கா 1955இல் சிங்களம் மட்டுமே ஸ்ரீ. ல; சு. கட்சியின் கொள்கை என்பதைத் திட்டவட்டமாகக் கூறினுர். திரு. பண்டாரநாயக்காவின் சிங்களம் மட்டும் கொள்கை அதன் பின் களனியில் நடந்த ஐ. தே கட்சி மகா நாட்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. களனி மாநாட்டில் அவர்கள் சம அந்தஸ்து கொள்கையைக் கைவிட்டு சிங்களம் மட்டும் கொள்கையை ஏற்றுக்கொண்டனர். எனினும் அவர்களுடைய தீர்மானம் மிகப்பிந்தி ஏற்படுத்தப் பட்டது. எமது தேசத்தின் வரலாற்றை உருவாக்கிய பாராளுமன்ற வாதிகள் அனைவரும் சம அந்தஸ்து என்ற கொள்கையிலிருந்து சிங்களம் மட்டுங்கொள்கையை நோக்கிச்சென்றனர் என்பதையே கடந்த காலப் பாராளுமன்ற வரலாறு உறுதியாகக் காட்டி நிற்கிறது. எமது பிரதமர் (திரு. டட்லி), காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா முதலிய குறிப்பிடத்தக்க அரசியல் வாதிகள் அனைவரினதும் அரசியல் வரலாற்றை ஆராய்பவர்களுக்கு இது புலனுகும்;

சமசமாசக் கட்சியிலும், கொம்யூனிஸ்ற் கட்சியிலும் உள்ள எமது கூட்டாளிகள் ஒரு காலத்தில் சம அந்தஸ்து என்ற நற்செய்தியின் போதகர்களாக இருந்ததற்காக நீங்கள் அவர்கள் மீது குற்றம் சுமத்துகிறீர்கள். அவர்கள் சம அந்தஸ்து கொள்கையைக் கைவிட்டிருந்தால் ஐ. தே. கட்சியினரும், சுதந்திரக் கட்சியினரும் வெவ்வேறு காலங்களிற் செய்ததையே அவர்களும் செய்திருக்கிருர்கள் என நான் கூறவிரும்புகிறேன்.

### ஆறு கடக்கும் வரை அண்ணன்தம்பி

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளை இந்நாட்டிலிருந்து அகற்றவும், மக்களுடைய இறைமையை நிலைநாட்டவுமே சட்டசபை உறுப்பினர்கள் போராடினர். அப்போது எந்த மொழியைப் பயன்படுத்துவது என்ற சிக்கலை ஏற்படுத்தாது ஆங்கிலத்தை அகற்ற ஒன்றுபடுவது இயல்பானதே. அந்த நிலையில் சட்டசபை உறுப்பினர்கள் இராசாங்க அமைச்சரின் (திரு; ஜே. ஆர்.) சிங்களம் 'மட்டும்' முன்மொழிவைத் 'தேசியமொழிகள்' மூன்மொழிவாகமாற்ற ஒப்புக்கொண்டனர், 1944ல் திரு. பண்டாரநாயக்காவை விட தொலைநோக்குடையவராக இருந்த அவர் (திரு. ஜே. ஆர்) சிங்களம் பற்றி எண்ணினுலும் காலத்திற்கேற்ப விட்டுக்கொடுத்தார்.

இராசாங்க அமைச்சர் இப்போது தமது செயல்கள் மூலம் [தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணம் 1966] இந்த நாட்டை வரலாற்றின் திசையிலிருந்து திருப்பி சம அந்தஸ்தை நோக்கிச்செலுத்த முயல்கிருர். எனினும், அரசியல் வாதிகள் தமது தலைவர்களாகிய மக்களின் விருப்பத்திற கெதிராகச் செயற்படும் போது அவர்கள் வெற்றி பெறமுடியாதென்பதை அவர் உணர்வார்;

### டட்லி—செல்வா ஒப்பந்தத்தின் ஒரு பகுதி

சபையிற் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள் பிரமாணம்-66) டட்லி—ஒப்பந்தத்தின் ஒரு பகுதியென்பதை நாம் நன்கு அறிவோம். இது மட்டும்தான் ஒப்பந்தத்தின் விளைவான சட்டங்களல்ல: இன்னும் பல அம்சங்களை உங்கள் ஒப்பந்தம் அடக்கியுள்ளதனை நாம் அறிவோம். ஆனுல், ஒப்பந்தத்தின் ஒவ்வொரு பிரிவையும் நாம் ஆதரிக்க முடியாது. உங்கள் ஒப்பந்தம் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உகந்ததா இல்லையா? என்பதை ஆராயாது நாம் இதனை ஆதரிக்க முடியாது.

தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாண (1966)த்தில் "சிங்களம் மட்டும் சட்டத்திற்கு முரணின்றி" என இருப்பது வெறும் கண் துடைப்பாகும். வட, கிழக்கு மாகாணங்களில் அரச மொழியை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்போகிறீர்கள்? என்பதை நான் பகுத்தாராய்ந்து காட்ட விழைகிறேன்.

### தமிழருக்கு ஆங்கிலம் மட்டும்

தமிழ்மொழி பிரமாணம் நடைமுறைக்கு வரும்வரை இதற்காக நாம் காத்திருக்கத் தேவை இல்லை. சமூக சேவைகள் அமைச்சு வெளியிட்ட படிவம் ஒன்று என்னிடம் உள்ளது. இது படிவம் வம் 38டீ14. அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட இப் படிவம் முழுவதும் ஆங்கிலத்திலும் தமிழிலுமே உள்ளது. இது வட, கிழக்கு மாகாணங்களிற் பெறப்படவில்லை. இது வட, கிழக்குக்கு வெகு தொலைவிற் பெறப்பட்டது. இம் முறையிலே தான் நீங்கள் (ஐ, தே. க) சிங்களம் மட்டும் சட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறீர்களா? இது வட; கிழக்குப் பகுதிகளுக்காகவே அச்சிடப்பட்டதென்று கொண்டாலும் இதிற் சிங்களம்எங்கே? உங்கள் அரசு வட, கிழக்கு மாகாணங்களில் சிங்களம் மட்டும் என்று பேசுகிறது! (ஆனுல்) எமது அரசு இது போன்ற படிவங்களை அடித்திருந்தால் அவை ஆங்கிலத்தில் மட்டுமே இருந்திருக்கும் என உறுதியாக கூறவிரும்புகிறேன்;

### தமிழ் - தற்காலிகம்

தமிழ் மொழி விசேட விதிகளை (1958) எவரும் ஏற்றுக் கொள்ளாத போதிலும் திரு. பண்டாரநாயக்கா அவற்றைக்கொண்டு வந்தார் அவை மிக அவசியமானவை என அவர் கருதினுர். சிங்களம் சகல தமிழ்ப் பாடசாலைகளிலும் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டுமென அவர் விரும்பினுர். இதன் மூலம் ஒரு கட்டத்தில் தமிழில் கடிதப் பிரதி அனுப்புவதை விட்டு விடலாம் என அவர் எண்ணினுர். அது மிகவும் நியாயமானதாக எனக்குப் படுகிறது. ஆனுல் புதிய பிரமாணங்கள் மொழி பெயர்ப்பு அனுப்புவதற்கு வழிவகுக்கவில்லை. மாருக முற்றிலும் மாறுப்பட்ட நிலையை ஏற்படுத்துகின்றன. சிலர் இதனுல் சிங்களம் அழிந்து விடும்; என்கிருர்கள். சிங்களம் என்றும் அழியாது;

காலஞ்சென்ற பிரதமர், (திரு. பண்டா) தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் தமிழ் என்னும் நித்தியமாக சிங்களத்தோடு சமாந்தரமான அரச மொழியாக, இந்த நாட்டுச் சட்டங்களில் நிலை பெற வேண்டுமென்று 'கனவிலும் கருதவில்லை. 1958, ஓகஸ்ற் 8 ஆம் நாள் அவர் விசேட விதிகள் சட்ட மூலத்தைச் சபையிற் சமர்ப்பித்துப் பேசியபோது காலப்போக்கில் தமிழ் மொழி பெயர்ப்பைத் தவிர்த்து விடுவதே தமது விருப்பம்; எண்ணம், கருத்து என்று தெளிவாக விளக்கியுள்ளார்:

அவரைப் பொறுத்தவரையில் தமிழ்மொழி பெயர்ப்பு அனுப்புவது சட்டபூர்வமான கடமையன்று. சிங்களம் மட்டும் சட்டப்படி 1960 டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின் தமிழிலோ, ஆங்கிலத்திலோ எதனையும் செய்வது சட்ட விரோதமாகிவிடும், இந்நிலையில் அத்திகதிக்குப் பின் நிர்வாகம் சீர் குலையாது தடுக்க. ஆங்கிலத்தில் நிகழும்செயல்கள் தொடர்ந்தும் ஆங்கிலத்தில் நடைபெற அவர் வழி வகுத்தார்,

இவ்விரு சட்டங்களையும் (சிங்களம் மட்டும், தமிழ் உபயோகம்) ஏற்படுத்திய பின் இப்போது தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமானங்கள்66கொண்டு வரப் பட்டுள்ளது. முந்திய இரு சட்டங்களுள் ஏதாவது ஒன்றைத் திருத்தாதவரை இவ்விரண்டுக்கு மிடையே இணக்கத்தை ஏற்படுத்த முடியாது—என்பதைச் சில காலத்திற்கு முன் பிரதமர் (திரு; டட்லி) உணர்ந்து கொண்டார்; இச் சட்டங்களை ஆக்கிய காலஞ்சென்ற பிரதமர் "தமிழ் மொழியைச் சில செயல்களுக்குப் பயன்படுத்தலாம்" (May be used) என்ருர்.

அவர் "தமிழும் உபயோகிக்கப்படவேண்டும் (Shall be used) என்று கூறியிருப்பாராஞல் அதன் மூலம் சிங்களம் மட்டும் சட்டம் திருத்தப்பட வழிவகுத்திருப்பார். சம அந்தஸ்து நிலை ஏற்படுத்தாமல் ஒரு பக்கத்தில் சிங்களத்தில் மட்டும் ஆட்சி மொழியென்றும் மறுபக்கத்தில் தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் கூற முடியாது. 'செய்யவேண்டும்' என்று காலஞ்சென்ற பிரதமர் (திரு. பண்டாரநாயகா) கூறியிருந்தால் அது சம அந்தஸ்துக்கு வழி வகுத்திருக்கும்.

### சிங்களம் தாழ்ந்தது

அரச மொழிச் சட்டப்படி சட்டபூர்வமான (சிங்கள மக்கள்) நிறுவனங்கள் எதுவும் சிங்களத்தைப் பயன்படுத்த வேண்டியதில்லை. ஏனெனில், அவை அரச பணியில் ஈடுபடுவதில்லை; ஆனுல் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்கள் 66 இன் படி இத்நிறுவனங்களின் சுற்றறிக்கைகள் தமிழிலும் இருக்க வேண்டும். இதன் விளைவு என்னவெனில், அவை 'சிங்கள மொழியோடு சேர்ந்து'

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதானே முற்போக்கு..!

'அக்கரை மாணிக்கம்'

முற்போக்கும் பிற்போக்கும் பேசிப்பேசி
முத்தமிழைக் கொன்றொழிக்க எண்ணுகின்ற
கற்றோரே பெரியோரே கனவான்களே
கண்ணீரில் வாடுகின்ற தமிழினத்தை
சொற்போரால் திசைதிருப்ப முயலுகின்ற
சுயபுத்தி இல்லாத எழுத்தாளர்காள்
உற்றாரும் உறவினரும் சிங்களத்தால்
உறுதுயரம் போக்கிடநீர் என்ன செய்தீர்.

ஆண்டுக்கு ஆண்டுஎம்மை ஆண்டுவரும்
ஆட்சியாளர் அப்போதைக் கப்போதுவந்து
தூண்டிலுக்கு எமைவீழ்த்தச் சொல்லுகின்ற
தூய்மையற்ற பேச்சுக்களைக் கேட்டுக்கேட்டே
கூண்டுக்குள் வீழ்ந்தகதை உலகறியும்
குடியரசு வந்தபின்பும் தமிழனுக்கு
வேண்டியதை கொடுப்பதற்கு ஆட்சியாளர்
விரும்பவில்லை உங்களுக்கேனிவை விளங்கவில்லை!

உறவுக்குத் தோள் கொடுத்தோம் ஒப்பந்தங்கள்
ஒன்றுக்கு இரண்டு செய்தோம் முடிவு என்ன
பிறநாட்டார் கேட்டுமனம் மலைக்கும்வண்ணம்
பேசுவதைத் தவிர ஒரு நன்மையில்லை
திறமையுள்ள தமிழனுக்கு வேலையில்லை
தேவையுள்ள மக்களுக்கு உரிமையில்லை
பிறகெதற்குப் பேசுகிறீர் சோஸலிசம்
பிரச்சினைகள் பேச்சாலே தீர்ந்துபோமா...

இதுவரையில் முற்போக்கு எழுத்தாளர்கள்
இலங்கைவாழ் தமிழர்களின் துயரந்தீர்க்க
எதுவேனும் செய்தீரோ எழுதினீரோ
இன்றுமட்டும் ஏனப்பா திட்டமெலாம்
புதுவிதமாய் போடுகிறீர் பொன்னம்பலம்-
போட்டு வைத்த ஆறம்சத் திட்டமெங்கே?
சதி செய்ய எண்ணுகிறீர் தமிழர்களின்
சரித்திரத்தைச் சிதைப்பதற்கும் பாடுகிறீர்...?

ஜெயகாந்தன் எதனையோ எழுதாமைக்கு
செந்நாய்கள் போற்சேர்ந்து ஊளையிட்டீர்
அயர்வின்றி அலுப்பின்றி மேடைதோறும்
அரியாலைப் பிரச்சினையைப் பேசித்தீர்த்தீர்
துயர்வடைந்து நின்றதமிழ்த் தொழிலாளரை
துடிதுடிக்க லொறிகளிலே ஏற்றிவந்து
பயமுறுத்திக் காடுகளில் விட்டுச்சென்ற
பயங்கரத்தை ஏனையா பேசவில்லை

தோட்டங்களை ஆட்சியாளர் எடுத்தபின்பு
தொழிலாளர் படுந்துயரம் உலகறியும்
கூட்டங்கள் நடாத்துகின்ற முற்போக்காளர்
கொஞ்சமேனும் இதையேனோ எதிர்க்கவில்லை
நாட்டங்கள் எங்கெங்கோ உமக்கு இந்த
நாட்டில் துயர்காணும் தமிழர்களின்
வாட்டங்கள் போக்கிடநீர் என்ன செய்தீர்
வாய்கிழியக் கத்துகின்றீர் ஐயோ பாவம்...

சிங்களமே இந்நாட்டின் ஆட்சிமொழி
சிறிதேனும் இதில் மாற்றம் என்றுமில்லை
எங்குமே நீதிமன்றச் செயல்கள் யாவும்
எப்படியும் சிங்களத்தில் இருக்கவேண்டும்
சிங்களவன் வடகிழக்கை ஆள்வதாற்றான்
செந்தமிழர்க் கிந்தநிலை தெரிந்து முங்கள்
பங்காளர் தம்மோடு சேர்ந்து எம்மை
படுகுழியில் வீழ்த்திடவோ உங்கள் திட்டம்...!?

●

## துணிவு.!

வீரத் தமிழ் மகளே விலையில்லாப் புது மலரே
திறல் விழுந்திட்ட உன் திரு உருவின் நிலை மாற்ற
நீரர் தனை இன்று சிந்திக்க வைத்தவளே
பாரோர் மடியவென்றே புறப்பட்டோம் ஏற்பாயம்மா,

பாராண்ட தமிழினத்தின் பண்பான நெறி முறையை
சீராகக் கண்டிடவே கூவி நின்ற கவிஞன் இன்று
தீராத கொடுமை தனை காணுகிறான் கொடுஞ்சிறையில்
மாறாத துயர் தாங்கும் மனப்பாங்கு தான்கொண்டு.

சிங்கக் குட்டிகளாய் சிறையினிலே சிக்கி வாழும்
தங்கத் தமிழர்கள் ஐம்பதின்மர் துயர் துடைத்து
பொங்கி யெழுந்திங்கு பரிநாசம் தான் செய்து
மங்காத் தமிழரசு நிறுவிடவோ பலருண்டு.

கடுமையாக அடக்கி எமை கலங்கிடவே செய்தாலும்
கொடுமைகள் தான் பட்டு செங்குருதி பொங்கிடினும்
உயிர்க் கொலைதான் செய்தெம்மை உருக்குலைய
வைத்தாலும்
துயர் துடைக்க வென்றே நாம் துணிந்தே
புறப்படுவோம்

—முல்லை ஞானராஜன்.

# போதிமாதவன் அழுகிறான்

காவலூர் — எஸ். ஜெகநாதன்

எமது சிறுகதை

சிறைச்சாலையின் வாசல் பகுதியில் கட்டப்பட்டிருந்த வண்ண விளக்குகள் உறங்கிக்கொண்டிருந்தன. அலங்கரிக்கப்பட்ட சிகரத்தின் நடுவில் வரையப்பட்டிருந்த புத்தபகவானின் திருமுகத்தில் இருந்து கருணை ஒளி வீசிக்கொண்டிருந்தது. உள்ளத்தில் மகிழ்ச்சிக்களிப்பைச் சுமந்தபடி மக்கள் கூட்டம் அந்த அலங்காரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது. வாயிற்பகுதியில் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கிகள் இசை வெள்ளத்தைக் காற்றில் கலக்க விட்டுக் கொண்டிருந்தன. மேற்குப் புறமாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் குளிர்பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தார்கள். போதிமாதவனின் பிறந்த நாள் விழா சிறைச்சாலை வாசலிலும் களை கட்டித் தான் விட்டது.

இந்த ஆரவாரங்கள் மெல்லியதாக செந்திலுக்கும் கேட்டது. நீண்ட பெருமூச்சை விட்டபடி நாடியைக் கைகளால் தடவிக் கொண்டான். இரத்தம் கசிந்திருந்த நாடியில் சில மயிர்கள் மட்டுமே தட்டுப்பட்டன. முகம் நிரம்ப வளர்ந்திருந்த தாடியில் பல மயிர்களைப் பிடுங்கிவிட்டார்கள். சிறைச் சுவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் கவலையின் ரேகைகள் பின்னிப்படர்ந்தன. அந்தக் கவலை தன்னைப் பற்றியதல்ல—இனத்தைப் பற்றியது. அதனால் தானே அவன் இருள் கொண்ட அறைச் சிறையுள் தனிவாழ்வு காண வேண்டி ஏற்பட்டது

கதிரவன் உச்சிவானத்தைக் கடந்து சிலமணி நேரமாகி விட்டது. புத்த பகவானுக்கான வாழ்த்துக் கீதங்கள் பாடத்தொடங்கி விட்டார்கள். உருக்குலைந்து போன தன் உடலைக் குனிந்து பார்த்து விட்டு மன வைராக்கியத்துடன் நிமிர்ந்த செந்தில் சிறைக் கம்பிகளை ஆவேசத்துடன் தன் கைகளால் இறுக்கிக் கொண்டான். அப்போது தான் சிறைச்சாலையின் வாசற்படியில் ஒரு தாய் தன் புனிதபாதங்களைப் பதிய வைத்து ஏறினாள். மிச்சம் மீதியாகத் தன்னிடமிருந்த தாலியை விற்று அதனால் கிடைத்த பணத்தைச் செலவுக்காக்கிக் கொண்டு வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டாள். அந்தத் தாயின் மனமோ தான் காணப்போகும் அந்த வீர மகனின் திருமார்பைச் சுற்றியே படர்ந்திருந்தது. "வெசாக்கோட சிறையிலை இருக்கிறவங்களைப் பார்க்க விடுவாங்களாம்'' என்று அயலவர்கள் கூறிய செய்தியளித்த நம்பிக்கையில் தான் அவள் புறப்பட்டிருந்தாள். பெற்றதாய் கூட அவனைப் பார்க்கக்கூடாதென்று தடை போட்டிருந்தார்கள்.

அலங்கரிக்கப்பட்ட சிகரத்தை நிமிர்ந்து பார்த்தவள் புத்தபகவானை மனதுள் வேண்டிக்கொண்டு மக்கள் கூட்டத்தை விலக்கியபடி உள்ளே நுழைந்தாள். ''யாரைப் பார்க்கணும்'' என்ற கேள்வி செவிப்பறையில் மோதிய போது "செந்தில்...'' என்று பெருமையுடன் அந்தத் தாய் கூறினாள். "ம்...ம்...'' என்று முறுகியபடியே எதிராக இருந்த இருக்கையைக் காட்டினான் சிறை அதிகாரி.

வேதனையைச் சுமந்து கொண்டு ஒரு தாய் வெளியே இருந்தாள். சோதனையில் தன்னை ஆழ்த்தி உள்ளே மகன் இருந்தான். முற்புறத்தில் மக்கள் கூட்டம் போதிமாதவனின் பெயரைச்சொல்லிக் கொண்டிருந்தது. சிலமணித்துளிகள் கழிந்திருக்கும் திடீரென்று எங்கும் மௌனம் சூழ்ந்து கொண்டது. புத்த மதகுரு ஒருவர் மேடையில் ஏறிக்கொண்டார். அவரது கனிவான குரல் பக்தர்களின் செவிகளுக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தது.

''கருணைக் கடலான போதி மாதவனின் முன்னே ஒரு தாய் ஓடிவந்தாள். அவள் கையிலே பிணமாகிவிட்ட குழந்தை. அழுதாள், கதறினாள் பகவானின் திருவாய் திறந்தது. 'மகளே இறப்பில்லாத வீட்டில் நான் சொல்வதை வாங்கிவா'' என்றார். குழந்தையை நிலத்தில் வளர்த்திவிட்டு அந்தத் தாய் ஓடினாள் வீடெல்லாம் ஓடினாள்''

சட்டென்று எழுந்து நின்றாள் செந்திலின் தாய். மதகுரு கூறிக்கொண்டிருந்த கதையிலேயேஒன்றிப்போய் இருந்தவளால் வேதனையைத் தாளமுடியவில்லை. 'அந்தப்பெண்மகனின் உயிர் காக்க ஓடினாள். நானும் தான் மகனின் உயிரைப் பார்க்க ஓடி வந்தேன்.என்று நினைத்தவள் ''புத்தபகவானே...'' என்று மனதுள் வேண்டினாள்.

''பகவானின் பாதத்தில் திரும்பி வந்து விழுந்தாள். அந்தத்தாயின் வேதனையை பகவானால் தாங்கமுடியவில்லை'' என்ற குரலும் "செந்திலைப் பார்க்கிறதுக்கு அனுமதிக்கமுடியாது"என்ற சிறையதிகாரியின் குரலும் சேர்ந்து அந்தத் தாயின் செவிப்பறையில் மோதின; துடித்துப்போய் எழுந்தாள். "கொலை செய்தவனை, கொள்ளையடித்தவனை பார்க்க விடுகிறதுக்கு ... இவன் செய்தது...'' அவனாலும் வார்த்தையை முடிக்கமுடியவில்லை. அவளுக்கும் விளங்கவில்லை. "ஐயோ...என் மகனை ஒருக்கா தூரத்திலை இருந்து பார்க்கவிடுங்கையா'' என்று அலறினாள். "அதெல்லாம் முடியாது வெளிய போ'' என்றான் காவலாளி.

கையெடுத்துக் கும்பிட்டபடி கண்ணீர் வடித்தாள்; "மேலிடத்து அனுமதியில்லை. விட ஏலாது'' என்று விட்டு, பிடித்துத் தள்ளாத குறையாக விரட்டினான். -'மகனே ...மகனே'' என்று அந்தத் தாயுள்ளம் ஓலமிட்டது. கொலை செய்ததால் சிறையில் அகப்பட்டுக்கொண்ட தன் மகனைப் பார்த்துப் பேசி விட்டு ஒருத்தி வந்து கொண்டிருந்தாள். அவள் அருகில் வந்தபோது மரியாதையுடன் விலகி நின்றான் காவலாளி. மீண்டும் செந்திலின் தாய் கெஞ்சினாள். "கதைக்காமலே தூர நின்று பார்க்கிறேன் ஐயா ... சாக முந்தி ஒரு தடவை பார்க்க விடுங்கையா'' நெருப்பான பார்வையொன்றைப் பதிலாக வீசியவன் கம்பிக் கதவை அடித்துச் சாத்தினான்.

''எதிரே இறந்துகிடந்த குழந்தை. அருகிலேயே பிரிவினால் துயருறும் தாய், அந்தக் காட்சி கண்டு புத்தபகவானின் கண்கள் கண்ணீர் வடித்தன''—தொடர்ந்து பிரசங்கம் காற்றில் கலந்துகொண்டிருந்தது.

உள்ளே குற்றம் புரியாத மகன் தண்டனையில் — வெளியே காணத்தவிக்கின்ற தாய். சிகரத்தில் இருந்த புத்தனின் உருவப் படத்திலுள்ள கண்களில் இரத்தச் சிவப்பாக ஏதோ வடிகிறதே. ஆமாம், அந்தக் காட்சியைக் கண்டு போதி மாதவன் அழுகிறான். இரத்தக் கண்ணீர் வடிக்கிறான்.

# 'ஓரேமொழி, ஓரேநாடு இதுவே பண்டா....

—6-ம் பக்கத் தொடர்

தமிழிலும் கடமையாற்றக் கடமைப்பட்டுள்ளன என்பதே, இதன் படி தமிழைப் பயன்படுத்துவது சட்டபூர்வமான கடமையாகிறது. ஆனல் சிங்களத்தைப் பயன்படுத்துவது சட்டபூர்வக் கடமையன்று. சிங்களம் சம அந்தஸ்திலும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்படுகிறது. சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம் முதலியவை சிங்களத்தைப் பயன்படுத்தக் கட்டுப்பட்டவையல்ல.

உங்கள் புதிய சட்டத்தின் மூலம் (விசேட ஏற்பாடுகள் 1966) சம அந்தஸ்திலும் உயர்ந்த நிலை (தமிழுக்குக்) [illegible] தைப் பௌத்த மகாசபை முதலிய நிறுவனங்கள் கட தமிழில் வேலைசெய்ய வேண்டிய சட்டபூர்வமான கடமைப்பாட்டை இச்சட்டம் ஏற்படுத்துகின்றது.

இராசாங்க அமைச்சர் (திரு. ஜே. ஆர்) ''உபயோகிக்கலாம் (May) என்ற சொல்லைப் பயன்படுத்தக்கூடாது. உபயோகிக்கவேண்டும் (Shall) என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும்'' என்றார். "உபயோகிக்கலாம்" என்ற சொல்லிருந்தால் தமிழைப் பயன்படுத்துவதா? இல்லையா? என்ற முடிவு அரச ஊழியரின் தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கேற்பவே தீர்மானிக்கப்படும்.'' என்று இராசாங்க அமைச்சர் கூறினார். 'அதனை அனுமதிக்க முடியாது. அரச ஊழியர் ஒரு மொழியைப்பயன்படுத்தும்போது அவர் எம்மொழியைப் பயன்படுத்துவார் என்பதில் ஒருமைப்பாடு அவசியம். தமிழ் அலுவலர் தாம் விரும்பும்போது தமிழை உபயோகிக்கலாம் என்றோ, சிங்கள அலுவலர் விரும்பும்போது தமிழைஉபயோகிக்கலாம் என்றோ சும்மா கூறிவிடமுடியாது. 'அவர் தமிழை உபயோகிக்கவேண்டும் (shall)' என்று தெளிவாகக் கூறவேண்டு'' மென அவர் கூறினார்'

## தமிழருக்கு சிங்களம் இல்லை

'உபயோகிக்கலாம்' என்ற சொல்லைச் சட்டப் புத்தகத்

– 8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

## ஒரே மொழி...

—7-ம் பக்கத் தொடர்

தில் எழுதுவதால் குழப்பம் எதுவும் ஏற்படாது. அரச ஊழியர்கள் தன்னிச்சையாக நடந்துவிடமுடியாது. மறுதலையாக 'உபயோகிக்க வேண்டும்' என்ற சொல்லை ஆள்வதால் ஏற்படும் நிலை வேறானது. இதன் மூலம் தமிழர் சிங்கள மொழியை என்றுமே படிக்க மாட்டார்கள். ஏனெனில் சிங்களம் படிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை. புதிய சட்ட மூலம் தமிழ் மொழியை எதிர்காலத்தில் சட்ட பூர்வமானதாக, உறுதிப்படுத்துகிறீர்கள். ஒரு மொழி, ஓரினம் என்ற நிலையை உறுதிப்படுத்த உருவாக்கப்பட்ட சட்டத்தின் இலட்சியத்தையே தகர்த்தெறியும் வகையில் உங்கள் மசோதா அமைந்துள்ளது.

பட்டிருப்பு உறுப்பினர் (திரு. இராசமாணிக்கம்) சிங்களச் சட்டத்தின் அடிப்படையில் சிங்களவரையும் தமிழரையும் ஒன்றுபடுத்த முடியாது என முன்பு கூறினார். இன்று ஒற்றுமை ஏற்பட்டுள்ளதாக அவர் கருதுவதன் பொருள் சிங்களம் மட்டும் அழிந்துவிட்டது என்பதுதானே பட்டிருப்புப் பிரதிநிதி இரகசியத்தை முன்பே அம்பலமாக்கிவிட்டார் எனலாம். தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்கள் 66 மூலம் அவரது கூற்று உண்மையாகி விட்டது. சிங்களம் மட்டும் செத்துவிட்டதால் தான் தேசிய ஒருமைப்பாடு சாத்தியமானது என்றுதானே கருதவேண்டும்.

சிங்களம் வட, கிழக்கு மாகாணங்களில் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட்டால் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும்; தமிழ் மொழி பெயர்ப்பை அனுப்ப வேண்டியதில்லை; விட்டுவிடலாம் என்பதே காலஞ்சென்ற பிரதமரின் எண்ணமாக விருந்தது. வட, கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது பற்றி அரசின் கருத்து யாது? அரசு வட, கிழக்குக்கு சிங்கள ஆசிரியரை அனுப்ப தமிழரசுக்கட்சியின் சம்மதத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாலும் இன்றுவரை எவரும் வட, கிழக்குக்கு அனுப்பப்படவில்லை. இதுபற்றி நீங்கள் உங்கள் கருத்தைத் திட்டமாகக்கூறவில்லை. தமிழரசுக் கட்சியுடனான உங்கள் இரகசியத்தை நீங்கள் வெளியிடாது மறைப்பதால் நாங்கள் தமிழ் மொழி (விசேட விதிகள்) பிரமாணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

— அடுத்த இதழில் முடியும்

## கூட்டுச்சேரா மாநாட்டுக்கு...

—5-ம் பக்கத் தொடர்

யிலும் சுமார் அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்; இவர்களில் மிகச் சிலரே நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். பெரும்பாலோரிடம் சி. ஐ. டி. பொலிசார் ஒரு வாக்கு மூலம் கூடப் பெறாது கடந்த ஓராண்டாக அடைத்துவைத்துள்ளனர்.

தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் காசி ஆனந்தன், பேரவை அமைப்பாளர் மாவை சேனாதிராசா, பேரவைத் தலைவர்களில் ஒருவரான வண்ணை ஆனந்தன் போன்றோர் இவ்வாறு வாக்குமூலம் கூட பெறாது அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பலரில் சிலராவர்.

காசி ஆனந்தனின் இரு சகோதரர்களான சிவஜெயம், சுதர்சன் ஆகியோரும்—ஒரு குடும்பமே சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உரிமை கேட்ட —இனவிடுதலை கோரிய விடுதலைவீரர்களான தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி சிறையிலடைத்து வைத்துக்கொண்டு, உச்சி மாநாட்டில் பங்குபற்றும்படி உலக நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுப்பது வெறும் கேலிக்கூத்தாகவே காணப்படுகிறது என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

விடுதலை கோரிய தமிழ் இளைஞர்கள் இவ்வாறுஇங்கு விசாரணையின்றி சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கும் கொடுமைபற்றி கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள இங்கு வரும் வெளிநாட்டு விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு எடுத்துச் சொல்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பல ஏற்பாடுகளை செய்து வருகிறது. இலண்டனில் இயங்கும் ஈழவிடுதலை முன்னணியும், ஈழத்தமிழர் கழகமும் இது விஷயத்தில் ஏற்கெனவே நடவடிக்கையெடுத்துள்ளது.

கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டுக்கு முன்னர், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை அரசு விடுதலை செய்யுமா? அல்லது அவர்களை நீதிமன்றம் கொண்டுசெல்லுமா? இந்த இரண்டில் ஒன்றை அரசு செய்யாவிடின் கூட்டுச்சேரா மாநாட்டு நேரத்தில் இலங்கை அரசின் கபட நாடகம் அம்பலத்துக்கு வருவதும், அதன் முகமூடி கிழிக்கப்பட்டு உலக அரங்கில் அதன் மானம் கப்பலேறுவதும் தவிர்க்க முடியாததாகி விடுமென்றும் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக் காட்டப் படுகிறது. விடுதலை கோரிய இளைஞர்களை சிறைக்குள் தள்ளிவிட்டு மாநாடு வேறு' என்று உலக 'விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் இலங்கை அரசை நோக்கி கேலியுடன் கேள்வியெழுப்பும் சந்தர்ப்பமும் உண்டாகலாம் என்று கூறப்படுகிறது:

என்ன செய்யப்போகிறது இலங்கை அரசு!


6-வது வெற்றி வாரம்!

**செல்லமகால்**

சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி,

நடித்த

ஜனாதிபதி விருது பெற்ற

**'அவள் ஒரு தொடர் கதை'**

திரைக் கதை—வசனம்
டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.Sc.

தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

2வது வாரம்

**கெப்பிட்டி**

**றீகல்** (மட்டுநகர்)

ஜெயசுதா - ஜெயசங்கர்,

தங்கவேலு - மனோரமா

நடித்த

**பந்தாட்டம்**

வேது வெற்றி வாரம்

கெப்பிட்டல்—பிளாசா

நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய்,
நடித்த—

**கௌரவம்**

(ஈஸ்ட்மென் கலர்)

2-வது வாரம்

**கிங்ஸ்லி** சிவாஜி-சரோஜாதேவி

நடித்த - **ஆலயமணி**

லிடோ (யாழ் நகர்) 5-வது வெற்றி வாரம்

சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன்
—நடித்த

**அன்பைத்தேடி**

(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** 7-வது வாரம்
—யாழ்நகர்

சீர்காழி கோவிந்தராஜன், டி. ஆர். மகாலிங்கம் நடித்த-

**அகத்தியர்**

(கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 11 பண்டாரநாயக்க வீதி, 194 ஏ; இலக்கத்தில் 1976ம் வருடம் ஜுன் 13-ந் மாதம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.